# மாயவரம் தாலூகா இரண்டாவது சுயமரியாதை மகாநாடு.

## தலைவர்கள் வரவேற்பு ஊர்வலம்.

## காங்கரஸ் மந்திரி சபைமீது நம்பிக்கையில்லை.

## ஹிந்தியை எதிர்க்க முடிவு

## தோழர்கள் சி. நடராஜன், ஈ. வெ. ராமசாமி உருவப்படத் திறப்பு விழா.

## தலைவர்கள் வீரமுழக்கம்

(நமது விசேஷ நிருபர்)
மாயவரம், செப். 26.

மாயவரம் தாலூகா இரண்டாவது சுயமரியாதை மகாநாடு 26-9-37 ந்தேதி ஞாயிற்றுக்கிழமையன்று மாயவரம் வடபாதி மங்கலம் தோட்டத்தில் அமைக்கப்பெற்ற "நடராஜன் பந்த"லில் ஆரம்பமாயிற்று. இம் மகாநாட்டுக்கு விஜயம் செய்திருந்த தலைவர்களான தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, நாகர்கோவில் பி. சிதம்பரம், எம். சிக்கையா, கே. எம். பாலசுப்பிரமணியம் கி. ஆ. பெ. விஸ்வநாதம், எஸ். குஞ்சிதம் குருசாமி, அ. பொன்னம்பலனார், கே. வி. அழகர்சாமி ஆகியவர்களை மகாநாட்டு வரவேற்புக்கழகத் தலைவர் தோழர் கே. லெட்சுமிகாந்தம் அவர்களின் இல்லத்திலிருந்து ஆயிரக்கணக்கான மக்களடங்கிய ஊர்வலமாக முக்கியவீதிகளின் வழியாக ஜே கோஷங்கள் முழங்கவும் மேளவாத்தியம், பண்டை தமிழ்நாட்டுவாத்தியம்முழங்கவும் மகாநாட்டுப் பந்தலுக்கு அழைத்துச்சென்றார்கள். கடை வீதிகளில் பல கடைகளில் தலைவர்கட்கு மலர் மாலையிட்டு உபசரித்தார்கள். நகர் முழுதும் கொடிகளாலும் வாழை மரங்களாலும் பல நீதி வாக்கியங்களாலும் வரவேற்பு வளைவுகளாலும் தோரணங்களாலும் நன்றாக அலங்கரிக்கப் பெற்றிருந்தது. "நடராஜன் பந்தல்" மிகவும் நன்றாக சிங்காரிக்கப் பெற்றிருந்தது. மகாநாட்டுப் பந்தல் முழுதும் பல சுயமரியாதை நீதி வாக்கியங்களால் அழகாக சிங்காரிக்கப் பெற்று மனதைக் கவரும்படியிருந்தது. இம்மகாநாட்டுக்குஉள்ளூரிலிருந்தும் தஞ்சாவூர், கும்பகோணம், கடலூர், சிதம்பரம்,புவனகிரி, நாகபட்டணம், நாகூர்,காரைக்கால், புதுச்சேரி, பட்டுக்கோட்டை, நீடாமங்கலம், திருவாரூர், நன்னிலம். மன்னார்குடி, சீயாழி, சாக்கோட்டை, திருத்துறைப்பூண்டி, பாபநாசம், அய்யம்பேட்டை, தாராசுரம், நாச்சியார் கோவில்,திருப்புவனம்,திருவிடைமருதூர், சிக்கல், திருநெல்வேலி, திருச்சி, திருப்பத்தூர், உறையூர், சேலம், ராசிபுரம், ஈரோடு, நாகர்கோவில், சென்னை, பெண்ணாடம், விருத்தாசலம், கொடவாசல், லால்குடி, பூவாளூர், கொரடாச்சேரி, மதுக்கூர், மூவலூர், காருகுடி, வடகரை முதலிய வெளியூர்களிலிருந்தும் சுமார் 2000 பிரதிநிதிகட்கு மேல் ஆண்களும் பெண்களுமாக விஜயம் செய்திருந்தார்கள். அவர்கள் விபரம் வருமாறு:—

தோழர்கள் மன்னார்குடி எ. ஜி. பொன்னு, முத்துசாமி, கலியன், தசியூர் கலியன், ராஜாங்கம், முத்துசாமி, மேலமத்தூர் (சீர்காழி) தர்மலிங்கம், ஆரோக்கியநாதபுரம் எ. ஜி. சந்தோஷம் உபாத்தியாயர், எ. ஆரோக்கியசாமி உபாத்தியாயர், எஸ். இரத்தினவேலு உபாத்தியாயர், முருகையன்,சாமிஉபாத்தியாயர், பக்கிரி படையாச்சி, சோமு படையாச்சி, கந்தசாமி படையாச்சி. மூவலூர் ஆர். சுப்பையன், ஜி. ராயப்பன் உபாத்தியாயர், எம். ஆறுமுகம், எஸ். ராமலிங்கம், எம். தில்லைநாயகம், என். பாலகிருஷ்ணன், ஜி. நாகராஜன், ஆர். சுந்தரராஜன், எஸ். சின்னச்சாமி, கே. ஷண்முகம், எம். முத்துக்குமாரசுவாமி, எம். முத்தையன் எம். கிருஷ்ணமூர்த்தி, ஆர், ராமாமிர்தம் அம்மாள், என். சம்பந்தம், வடகரை,அ. ஷெய்குதாவுத் மு. சைய்யது அஹமது, ஆ, சைய்யது அஹமது, சே. முகம்மது கனி. ந. மு. முகம்மது அபூபக்கர், எ. யாக்கூப். நெடுங்காடு எஸ். சுந்தரேசன், சே. விஸ்வநாதம், சீயாழி, சப்பந்தம் சிவப்பிரகாசம், சிங்காரம், நாகை காளியப்பன், கே. ராஜு, ஆர். கோவிந்தசாமி, வ. கே. பெருமாள், முனியப்பன், திருவிளையாட்டம் எ. சவுரி ராஜன், ஜி. முத்தையன், ஒ. எ. முத்தையா பிள்ளை, வி. கணபதி ஆச்சாரி, ஜி. வெங்கட்டராமன், கண்ணப்பன், கோபாலு, பெருமாள், எஸ். ஆர். தாஸ், ஆர். வி. ராமசாமி, ஆர். கோவிந்தசாமி, கே என். ராஜகோபால், என். சம்பந்தம் பிள்ளை, ஆர். வைத்தினாதசாமி, எ. எஸ். சுவாமி. எஸ். சீநிவாசம் பிள்ளை, பி. கோதண்டபாணி நாயுடு, துரைராஜ், கே. நாராயணசாமி நாயுடு, மதுர பாஷிணி சௌரி ராஜன், மேரி, நீதி, மணி, மேமாத்தூர் ராமானுஜம், குற்றாலம். குஞ்சிதபாதம் பிள்ளை, கோவிந்தராஜுலு பிள்ளை, டி. சின்னையா, விருத்தாசலம் எஸ். சிவசாமி, கே. ஜி. தங்கவேலு, ப. கணபதி, எ. குழந்தைவேலு, அருணாசலம், சாவித்திரிதம்பதிகள்,யாக்கோபு, சீனிவாசன், வரதராஜன், கே. மருதையா, கே. ஆறுமுகம், சி. ராஜு, ஆர். எஸ். பி. ராமையா, ஜி. சாமிநாதன் எ. எஸ். நாதன், டி. கே. மூர்த்தி, பி. மருதையா, வீராசாமி, கே. வி. ராஜகோபாலன், அந்தோணி, தங்கவேல் பிள்ளை, பொன்னுசாமி, சொக்கலிங்கம், ப. ரங்கசாமி, ஆர்.எஸ். பி.கிருஷ்ணன், மாயவரம் ராஜு, எஸ். ரெங்கசாமி, எஸ். சம்பந்தம் எஸ். ரெத்தினம், எஸ். சம்பந்தம் எஸ். சக்ரவர்த்தி. எஸ். வி. லிங்கம், சௌரி, சுந்தரம், நாராயணசாமி, கோவிந்தசாமி, அண்ணாமலை, கம்பவுண்டர் ஷண்முகம், சின்னதம்பி, ராஜகோபால், சின்னதம்பி, மாரிமுத்து, தண்டபாணி,நீலகண்டன், ந.முத்தையா எம். இராமனாதன் தம்பதிகள், ராவ்சாகேப் ரத்தினம் பிள்ளை ராமாமிர்தம்மாள், கிருஷ்ணசாமியப்பா, எ. எஸ். சுப்பிரமணியன், இராமாமிர்தம், அலமேலு அம்மாள், திருநாகவல்லி அம்மாள், நாகரத்தினம் அம்மாள், லெட்சுமிகாந்தம், இரத்தினசபாபதி, கிருஷ்ணமூர்த்தி, பக்கிரிசாமி, வேணுகோபால், விட்டோபா, நடேசன், காத்தமுத்து, வீராசாமி, சொக்கலிங்கம், கலந்தர், மாணிக்கம், சட்டநாதன், சோமசுந்திரம் பிள்ளை, ராமசந்திரன், சௌரி ராஜன், எஸ். ரெத்தினம், எஸ். ரெங்கசாமி, எஸ். சக்கரவர்த்தி, புவனகிரி எஸ். சிங்காரம்,எஸ். கந்தசாமி, ஆர். செல்லப்பா, கே. ராமநாதன், வி. முத்தையா, கே. சரவணன், கே. நமசிவாயன், சம்மந்தன், அண்ணாமலை, ரெங்கராமாநுஜம், டி. தங்கவேல், பெண்ணாடம்சி. முனுசாமி, திருவாரூர் பார்த்தசாரதி, குப்புசாமி, எஸ். பி. கிருஷ்ணசாமி, கே. ஆர். முத்துகுமரன், எஸ். சிவசங்கரன், டி. கே. விட்டல், ஆர். ஜே. ராம், பாலசுப்பிரமணியர், எஸ். பார்த்தசாரதி, புர்க்கானுதீன், மன்னார்குடி கே. கே. ஜி. பால், சி. ராமசந்திரன், எ. ஜி. தஸ்தகீர், ஆர். ராமசந்திரன், ஆர். ராதா, ஆர், உத்திராபதி, சாக்கோட்டை எஸ். வீரப்பா, ஆர் முத்துகிருஷ்ணன், சி. கன்னையன், கே. கணபதி, வி. கன்னையன், ராமநாத், எஸ். ஆர். சாமி, பி. மாரிமுத்து, நாகர்கோவில் பி. சிதம்பரம் பி. எ. பி. எல், டி. எம். சிதம்பரதாணு பிள்ளை, வி. ஈஸ்வரமூர்த்தி, எஸ். பகவதிப்பெருமாள், டி. சி. முத்தையா. திருநெல்வேலி வி. திருவரங்கம்பிள்ளை, நாகூர் என். தியாகராஜன், பி. சங்கவேலு, பி. பொன்னம்பலம், டாக்டர் என், சிங்காரவேலு, டி. கோவிந்தராஜுலு, எஸ். தெண்டபாணி, ஆர். என். ராஜு, காரைக்கால் குஞ்சிதபாதம், வடகரை ம. அமிர்தலிங்கம், இ. இஸ்மாயில், ரா. முகமது இப்ராஹிம் (சிங்கை குடியரசு ஏஜண்டு) கா. மு. அபூபக்கர், என். இ. முகமது காசிம், ஆ. செய்யதகமது, செ. முகமது கனி, ந. மு. முகமது அபூபக்கர், மு. செய்யத்தகமது, பா, அப்துல் ஹமீது, மு. பக்கிர் முகமது, இ. அ. முகமது முஸ்தபா, ம. அப்துல் ரஹ்மான், மு. அப்துல் அஜீஸ், மீ. அ. அப்துல் அஜிஸ், மு. முகமது சாலிகு, அ. ஷேக்தாவுது, மு. அப்துல் லதீப், அப்துல் வஹாப், தா.முகமது இப்ராஹிம், ஆய்ப்பாடி, முகமது இஸ்மாயில், திருவாரூர் லெட்சப்பா, புதுச்சேரி எஸ். சிவப்பிரகாசம், எஸ் துரைராஜ், குப்பகோணம் ஜி. சிறுவ லிங்கம், ஆர். பி- சுந்தரம், கே. ஜி. ரெங்கையா, ஜி. கோவிந்தய்யா, ஆர். பக்கிரிசாமி, எ. ஷேக் இஸ்மாயில், சாமி. சிதம்பரனார், கே. கே. நீலமேகம் (சு. ம. சங்கத் தலைவர்) குப்புசாமி, என். சிங்காரம், முத்துவீரு, ஜி. சுப்பிரமணியம், எஸ். கிருஷ்ணன், எ. செல்வம், மரியநாதன், வி. லெட்சுமணன், ஜி. ராமையா, கோவிந்தசாமி, ஆர். வெங்கடாசலம், கோவிந்தராஜு, ஆர். சக்ரபாணி சுப்பராயன், என். விஜயராகவலு, ஜி. சுப்பிரமணியம் (விடுதலை ஏஜண்டு) கிளியூர் சாமிநாத நாடார், எஸ். பஞ்சாபிகேசன், ஜி. சீனிவாசன், டி. வி. கிருஷ்ணசாமி, மு. கண்ணன், எஸ். ராமதாஸ், எ. சிங்காரம், பெ. வெங்கிடாசலம், ஆ. சிவராமசாமி, பெருமாள், சக்கரபாணி (சு. ம. சங்க உபதலைவர்) எஸ். முத்தய்யா, எல். ரெத்தினசாமி, எஸ். சாமிநாதன், எ. ஆர். ராமச்சந்திரன், பி. முத்துவேல், மாயவரம் தாலூகா கோடங்குடி எம். அந்தோனி, வி. நாகப்பன், எஸ். சிமியோன், க கிட்டு, அப்பாதுரை, சின்னதம்பி, ஆறுமுகம், பெரியசாமி, மரியதாஸ், சவுரியப்பன், நெடுமருதூர் வைத்திலிங்கம், பக்கிரி, ஜெகநாதன், நாகு, அப்பாசாமி, பிச்சு, குப்பு, தன்னிமால், முத்தையா, வைத்தியலிங்கம், ஆறுமுகம்ரெத்தினம், கோவிந்தன், நாராயணன். ஆசிர்வாதம், கொ. ரெத்தினம், மாரி, வேலன், ராமசாமி, கோவிந்தசாமி, தம்புசாமி, கந்தன், சாமிக்கண்ணு, கே. நாகப்பன், தஞ்சாவூர் எஸ் ரெத்தினசாமி, நாகப்பட்டிணம், டி. எஸ். மணி, ஆர். கோவிந்தசாமி, கே. ராஜா. தியாகராஜன்,நடராஜன்,தண்டபாணி, தங்கவேலு, நாராயணசாமி ஈரோடு ஈ. வெ. ராமசாமி, எம். சிக்கைய்யா, அ. பொன்னம்பலம், சேலம், பி. கே. வரதராஜலு, ராசிபுரம், ராமசாமி, லால்குடி பூவாளூர் அ. பழனியப்பா, சொ. செல்லப்பா, திருச்சி, கி. ஆ. பெ. விஸ்வநாதம், ஆர். பெருமாள், மணவை ரெ. திருமலைசாமி, வெங்கடாசலம் முதலியவர்களாகும்.

### கொடியேற்றுவிழா.

இம் மகாநாட்டுக் காரியதரிசி தோழர் (டாக்டர்) ராமச்சந்திரன் அவர்கள் இம் மகாநாட்டுக் கொடியை உயர்த்தும்படி சென்னை அட்வகேட், தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. எ. பி. எல். அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் "சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு"என்றெழுதப்பட்டிருந்த சிகப்புக் கொடியைப்பற்றி விளக்கமாகப் பேசி சுயமரியாதை லட்சியம் நாடு முற்றும் பாவி, புரோகிதக் கொடுமையும், சாதி மத சமயப் பூசல்களும் ஒழிந்து. அறியாமை நீங்கி அடிமை மோகம் அகன்று தேசியப்பித்தலாட்டங்கள் அழிந்து தேசமக்கள் யாவரும் சமத்துவத்துடன் சுயமதிப்புடன், சுதந்தரத்துடன் வாழ வேண்டிய அவசியத்தைப் பற்றி வீரம் ததும்பப் பேசி அறிவுடமையோடு நாம் வாழவேண்டுமென்றும் "சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு" என்றும் தெளிவாகக்கூறி பெருத்த கரகோஷத்தினிடையே சுயமரியாதை சிகப்புக்கொடியை உயர்த்தினார். சுயமரியாதைக்கொடி வானுற ஓங்கி மிகக் கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது.

### மகாநாடு ஆரம்பம்.

இம் மகாநாட்டுப் பந்தல் முழுதும் பிரதிநிதிகளும் விசிட்டர்களும், ஆண்களும், பெண்களும், நிறைந்து பந்தலைச் சுற்றிலும்



மாயவரம் சுயமரியாதை மகாநாட்டுத் தலைவர் தோழர் பி. சிதம்பரம் பி. ஏ. பி. எல்.

பொது மக்கள் ஆர்வத்துடன் கூடியிருந்தார்கள். இம்மகாநாடு காலை 9-30 மணிக்கு ஆரம்பமாயிற்று. தோழர்கள் பட்டுக்கோட்டை குழந்தை, கே. வி. ராஜகோபால், புதுச்சேரி எல். துரைராஜ் ஆகியவர்கள் சுயமரியாதைக் கீதங்கள் பாடினார்கள். மேடைமீது சுயமரியாதைத் தலைவர்கள் வீற்றிருந்தார்கள். இம்மகாநாடு ஒரு மாகாண மகாநாட்டைப்போன்று எல்லா ஜில்லாக்களிலிருந்தும் சு. ம. தோழர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

### மகாநாட்டுத் திறப்புவிழா.

இம் மகாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் கே. லெட்சுமி காந்தம் அவர்கள் ஈரோடு தோழர் எம். சிக்கையா அவர்களை இம்மகாநாட்டைத் திறந்து வைக்கும்படி வேண்டினார்.

ஈரோடு தோழர் எம்.சிக்கையா அவர்கள் உணர்ச்சியும், வீரமும் ததும்பிய ஓர் பிரசங்கம் செய்து மகாநாட்டை பெருத்த கரகோஷத்தினிடையில் திறந்துவைத்தார். (அவருடைய திறப்பு விழாப் பிரசங்கம் நாளை வரும்)

### வரவேற்புப் பிரசங்கம்

இம்மகாநாட்டு வரவேற்புக் கழகத்தலைவர் தோழர் கே. லெட்சுமிகாந்தம் அவர்கள் மகாநாட்டுத் தலைவர்களையும் பிரதிநிதிகளையும் வரவேற்று ஓர் பிரசங்கம் செய்தார். (அதுவிபரம் பின்னர் வரும்)

### மகாநாட்டுத் தலைவர் பிரசங்கம்

இம்மகாநாட்டுத் தலைவர் நாகர்கோவில் அட்வகேட் தோழர் பி. சிதம்பரம் பி. எ. பி. எல். அவர்களைத் தலைமை வகிக்குமாறு வரவேற்புக் கழகத் தலைவர் பிரரேபணை செய்தார். அதன் பிறகு மகாநாட்டுத் தலைவரை அறிமுகம் செய்வித்து தோழர்கள் எஸ். ரெத்தினம், எஸ். சக்ரவர்த்தி, எஸ், சம்பந்தம், கே. வி. அழகர்சாமி, கி. ஆ. பெ. விசுவநாதம், ஈ, வெ. ராமசாமி ஆகியவர்கள் ஆமோதித்தும் ஆதரித்தும் பேசினார்கள். பெருத்த கரகோஷத்தினிடையில் தலைவர் எழுந்தார் அவருக்கு மலர் மாலை சூட்டினார்கள்; பூ மாரி பொழிந்தார்கள்; கரகோஷம் செய்தார்கள்.

மகாநாட்டுத் தலைவர் முதலில் நன்றி தெரிவித்தார். சுயமரியாதை லட்சியத்தை விளக்கிக் கூறினார். வைக்கம் சத்தியாக்ரஹம் பற்றி குறிப்பிட்டார். திருவாங்கூர் ஆலயப் பிரவேசத்திற்குக் காரணம் சுயமரியாதை இயக்கம்தான் என்றும் வேறு எவரும் காரணமில்லை என்றும் தெரிவித்தார். தமிழ் மொழியை அழிக்க எண்ணுவது தவறு என்றும் ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைக்க முயல்வது தமிழர்கள் ஆதிக்கத்திற்கு கேடுசூழ்வதாகு மென்றும் தெலுங்கு நாட்டை ஆந்திர மாகாணமென்றும் கன்னட நாட்டை கன்னட மாகாணமென்றும் தனி மாகாணமாக பிரிக்க விரும்பும் பொழுது தமிழ் மாகாணத்தை ஏன் தனி மாகாணமாகப் பிரிக்கக் கூடாது என்றும் தமிழர்கள் ஆதிக்கத்தை யளித்து ஆரியர் ஆதிக்கத்தையும் நாகரிகத்தையும்பரப்புவது தமிழர்களால் சகிக்கக் கூடாத காரியமென்றும் மற்றும் திருவாங்கூர் அரசியல் நிலையை பற்றியும்தமிழ் நாட்டு சென்னை மாகாண அரசியல் நிலைமையைப் பற்றியும் விரிவாகவும் விளக்கமாகவும் பேசினார்.

### படத்திறப்பு விழா.

காலஞ் சென்ற மாயவரம் தோழர் சி. நடராஜன் அவர்களின் உருவப் படத்தை சென்னை தோழர் எஸ். குஞ்சிதம் அவர்கள் திறந்து வைத்து அவருடைய குணாதிசயங்களையும் வீர தியாக செய்கைகளையும் பற்றிப் பேசினார். (அதுசமயம் பல தோழர்கள் கண் கலங்கினார்கள்.) தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் உருவப் படத்தைத் திருச்சி தோழர் கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்கள் திறந்து வைக்க அவருடைய சேவையைக் குறித்தும் தியாகத்தைக் குறித்தும் தமிழ் நாட்டு மக்கட்கும் சிறப்பாக தேசத்தாருக்கும் அவர் கொண்டும் எழுத்தும் உபதேசங்களும் கிளர்ச்சிகளும் பெரும் பயனளிக்கின்றன வென்றும் பாராட்டிப் பேசினார். இச்சமயம் பலத்த கரகோஷம் செய்து ஜே முழக்கம் செய்தார்கள். தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் நன்றி கூறினார். இம்மகாநாட்டுக்கு வர முடியவில்லையென்றும் மகா நாடு சிறப்பாக நடக்க வேண்டுமென்றும் தோழர்கள் விருதுநகர் முனிசிபல் சேர்மென் வி. வி. ராமசாமி, தர்மபுரி ஜில்லா போர்டு தலைவர் டி. கிருஷ்ணமூர்த்தி கானாடு காத்தான் வைசு. ஷண்முகம் தேவகோட்டை நாராயணசாமி, ரங்கநாயகி கோயம்புத்தூர் எம். சங்காலிங்கம் திருச்சி அபிமன்னன், டி. வி. ராமசாமி, தஞ்சாவூர் டி. எ. ஏகம்பரம், நாகபட்டணம் டி. பி. ஆறுமுகம் முதலியவர்களிடமிருந்து வந்த தந்திகளும் பாராட்டுக் கடிதங்களும் படிக்கப் பெற்று மகாநாடு காலை 12-½ மணிக்குப் பகல் சாப்பாட்டிற்காகக் கலைந்தது. சுமார் 1000 பேர்கட்கு மேல் பகல் விருந்து விமரிசையாக நடைபெற்றது.

### பிற்பகல் நடவடிக்கை.

இம்மகாநாடு மீண்டும் பிற்பகல் 2-½ மணிக்கு ஆரம்பமாயிற்று. பல தோழர்கள சுயமரியாதைக் கீதங்கள் பாடினார்கள். அதன் பிறகு பல தீர்மானங்கள் நிறைவேறின. பல தோழர்கள் தீர்மானங்களை ஆதரித்தும் ஆமோதித்தும் வீரம் ததும்ப உணர்ச்சி பொங்கும்படி வீரமுழக்கம் செய்தார். கள். "காங்கரஸ் மந்திரிகள் மீது நம்பிக்கை இல்லை, ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குவதை எதிர்த்தல், கதர்த்திட்டம் உபயோகமற்றது, இதற்கு சர்க்கார் இரண்டரை லட்ச ரூபாயைப் பாழாக்கக் கூடாது" என்ற தீர்மானங்கள் வந்த பொழுது மகாநாட்டில்ஏற்பட்ட உணர்ச்சிக்கும் கரகோஷத்திற்கும் எல்லையில்லை. (மகாநாட்டுத் தீர்மானங்கள் யாவும் பின்னால் வெளி வரலாம்.)

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் இத் தீர்மானங்கள் எல்லாவற்றையும் விளக்கி சுமார் 2 மணி நேரம் பல உபமானங்களுடன் வீரம் ததும்ப உணர்ச்சி ததும்ப வீர முழக்கம் செய்தார்,

மகாநாட்டுக் தலைவர் முடிவுரை கூறி யாவருக்கும் நன்றி தெரிவித்து அமர்ந்தார். தோழர்கள் கெ. லெட்சுமிகாந்தம், எஸ், ரெத்தினம், அ. பொன்னம்பலனார் ஆகியவர்கள் மகாநாட்டுக்கு வந்திருந்த தலைவர்கட்கும் பிரதிநிதிகட்கும் உதவி செய்த எல்லாத் தோழர்கட்கும் நன்றி தெரிவித்து மலர் மாலை சூட்டினார்கள். இரவு 9-மணிக்கு இம்மகாநாடு இனிது முடிவு பெற்றது. இரவு எல்லோருக்கும் விருந்து நடைபெற்றது. பின் எல்லோரையும் வழியனுப்பி வைத்தார்கள்.

---

## மார்க்கியுஸ் மார்க்கோனி ஆஸ்தி.

### ரேடியோ கார்ப்பொரேஷன் தலைவர் அறிக்கை.

நியூயார்க், செப். 25

மார்க்கியுஸ் மார்க்கோனியின் ஆஸ்தியின் மதிப்பு ப. 30,000 என்று அவருடைய குடும்பத்தின்சார்பாக ரேடியோ கார்ப்பொரேஷன் தலைவர் இன்றுஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இந்த சொத்து மார்க்கியுஸின் முதல் மனைவியின் மூன்று பிள்ளைகளுக்கும் குமாரத்தி எலக்ட்ரா என்பவளுக்கும் பிரித்துக்கொடுக்கப்படுமாம்.